முன்னுரை:

கனவுகள் நாம் அனைவரும் இரவில், பகலில் கண்ட காட்சிகள் நிகழ்வுகள் நம் மூளையில் சேகரித்து ஒரு திரைப்படம் நம் கண்களை மூடியபடியே பார்க்கும் ஒரு அதிசயம்.

நிகழ்வுரை:

கட்டுரைக்கு வருகிறேன் நம் முன்னாள் ஜனாதிபதி ஐயா ஏபிஜே அப்துல் கலாம் அவர்கள் கனவு காணுங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் தெரியும் என்றார்

எப்படி கனவு காண்பது நம்முடைய கனவில் வருவது எல்லாம் துரோகம், கோபம் பிரச்சினைகள் தானே வருகிறது இதெல்லாம் கண்டால் நமக்கு முன்னேற்றப் படிகள் வராது மாறாக மனது கஷ்டம் தான் வரும் .

அதனால் லட்சியங்களை கொண்டு கனவு காண சொல்கிறார் இந்தியா நமது நாடு அதில் நம் நாடு வல்லரசாக வேண்டும் என்ற நினைப்பு நம் உள்ளத்தில் ஏற்படுத்திவிட்டால் நம் மூளையும் அதேபோன்று ஒரு செயலை செய்யத் தூண்டும் அதுதான்கனவு.

செயல் அதற்கான மூலக்கூறு புதிய கண்டுபிடிப்புகள் நாம் அனைவரும் சிந்தனை செய்தால் கண்டிப்பாக கனவு நினைவாகி ஒரு புதிய புரட்சியை உண்டாக்கலாம்.

உதாரணத்திற்கு:

கொரோனா நோய் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது அதற்கு மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை இதற்கான முயற்சியில் நாம் மருத்துவர் குழு இணைந்து செயல்படுகிறார்கள் ஆனால் ஏதோ ஒரு மூலக்கூறு கிடைக்காமல் பின்னடைவு அடைகிறார்கள்.

மருத்துவ குழு கொஞ்சம் அதைப்பற்றிய சிந்தித்தால் விரைவில் இந்திய மருத்துவ குழு அம்மருத்தினை கண்டுபிடித்துவிட முடியும்.இம்மருந்தினை கண்டுபிடித்துவிட்டால் இந்தியா தான் உலகின் வல்லரசு நாடுகளில் ஒன்றாகிவிடும்.

நம் ராணுவத்தில் அப்துல் கலாம் ஐயா பல அரிய கண்டுபிடிப்புகளை நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிறார். அவரே போல சில விஞ்ஞானிகள் நம் நாட்டில் இருக்கிறார்கள் அவர் திறமைகளை ஊக்குவித்தால் அவரைப் போன்று பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி நம் இந்தியா வல்லரசாகி விட அவர்களால் முடியும்.

அதற்கு அரசு மாணவர்களிடையே விஞ்ஞான அறிவியலை கண்டுபிடிப்புகளை ஒவ்வொரு மாதமும் நடத்தி அவர்களிடம் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து படி ஏற்றினால் நிச்சயம் ஒரு அப்துல் கலாம் நம்மிடம் தோன்றலாம்.

பொருளாதாரம் நாம் இன்றும் பொருளாதாரத்தில் பின்தங்கி தான் இருக்கின்றோம் அதற்கு முக்கிய காரணம் வேலைகள் இல்லாமல் பலரும் கஷ்டப்படுகின்றனர் அனைவருக்கும் அவர்கள் திறமைக்கேற்ப படித்தவர்கள் படிக்காதவர்கள் என்ற

நிலைமாறி அவர்களின் திறமைக்கு ஏற்ப ஒவ்வொரு கருத்திலும் செயலிலும் அவர்களை முன்னேற விட்டால் கண்டிப்பாக இந்தியா வல்லரசாகி விடும்.

மாணவர்களிடம் அப்துல் கலாம் அவர்கள் பேசும்போது உங்கள் கனவுகளை மூளையில் விதையுங்கள் அக்கனவு
விருட்சமாகும். இந்தியாவின் ஆணிவேர் நீங்கள்தான் என்று மாணவர்களிடையே அறிவுரை வழங்குவார் அப்துல் கலாம் அவர்கள்.

இந்த அவர் இல்லை ஆனால் ஏற்றிய கனவு என்ற பொறி இன்றும் அனையாமல் மாணவர்களிடையே உள்ளது.
கல்விக் கடன்கள் தாராளமாகக் கொடுத்து மாணவர்களிடையே அறிவாற்றலை உயர்த்தினால்

மக்களிடையே வறுமை என்னும் பஞ்சத்தை போக்கினால் இந்தியா கண்டிப்பாக வல்லரசாகும் என்று அப்துல் கலாமை ஐயா போல நானும் கனவு காண்கிறேன்.

முடிவுரை:

. நம் இந்தியா நாட்டில் எத்தனை வளங்கள் உள்ளன.
அதை சீர்படுத்தி செழுமைப்படுத்தி ஒவ்வொரு இந்திய குடிமகனும் செய்தால் நாடு வல்லரசு ஆகிவிடும் .

ஆனால் நாம் அதை செய்யாமல் கேளிக்கைகளில் சூதாட்டத்தில் போதையில் குற்ற செயல்களில் நாட்டின் மக்கள் ஈடுபடுவதால் அவர்களுடைய திறமைகள் வீணாகின்றன எனவே வல்லரசாக வேண்டும்.

உலக அளவில் வளர்ச்சி பட்டியலில் நம் இந்திய நாடு எல்லாவற்றிலும் சிறந்த இந்தியா என்று பெயரெடுக்க வேண்டும் என்பதே நாம் அப்துல் கலாம் ஐயாவின் கனவு கண்ட இந்தியா ஆகும்.

இந்த கட்டுரை என்னுடைய சொந்த எண்ணத்தில் உருவானது.


. இப்படிக்கு

. R.பேபி ராணி

. வாஷி நவிமும்பை

செல். 9833056979